OS.No. : 04/2022 C/w 45/2023 & 46/2023

நாள் : 27.11.2025

வா.சா. : 1

பெயர் : சீத்தாராமன், த/பெ. கணேசன்

மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

25.06.2004 அன்று தாவா சொத்துக்களை வாங்குவதற்காக மட்டும் என் அப்பாவிற்கு அதிகாரம் கொடுத்து பத்திரம் எழுதிக்கொடுத்தேன். அதற்கா சான்று நகல் **வாசாஆ 45** ஆகும். அந்த அதிகாரத்தை 19.08.2021 அன்று ரத்து செய்த பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் அது **வாசாஆ 46** ஆகும். அந்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் என் அப்பா வாங்கிய சொத்திற்கான **வில்லங்க சான்று நகல் வாசஆ 47** ஆகும்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாசாஆ 45 அடிப்படையில் என் அப்பா வாங்கிய சொத்துக்கள் சுமார் ஐந்து அல்லது ஆறு இருக்கும். அவை இந்த வழக்கிடை சொத்துக்களில் ஒரு பகுதியாகும். அந்த அதிகார பத்திரப்படி என் அப்பா என் பெயரில் சொத்துக்களை வாங்கவில்லை என்ற விவரம் நான் 16 ஆண்டு காலம் வெளிநாட்டில் வசித்ததால் எனக்கு தெரியாது பிற்பாடு தான் தெரியவந்தது. இந்த விசயம் எனக்கு 2013ல் தெரியவந்தது. நான் பவர்கொடுத்து என் பெயரில் தான் வாங்க சொன்னேன். ஆனால் என் அப்பா அவரின் விருப்பபடி வாங்கிவிட்டார். நான் இந்த விவரம் தெரிந்து கொண்டு கேட்டபோது வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்தவுடன் என் பெயரில் மாற்றி செட்டில்மெண்ட் செய்து தருவதாக சொன்னார். 2013ம் ஆண்டே என் அப்பா என்னை ஏமாற்றி விட்டார் என்று எனக்கு தெரியவந்தது. 2014க்கு பிறகு என் அப்பா என்னுடைய பணத்தில் எந்த சொத்தும்

வாங்கவில்லை. அந்த அதிகார பத்திரத்தை ரத்து செய்த விவரம் என் அப்பாவிற்கு தெரியும். என் அப்பா என் பெயரில் சொத்தை வாங்காமல் அவர் பெயரில் வாங்கி கொண்ட விவரத்தை நான் வெளிநாட்டிலிருந்து 2014ல் வந்தபிறகு எனக்கு சொன்னார்கள். 2015 ல் தான் நான் அனைத்து விவரங்களையும் சேகரித்து எடுத்தேன். திருமண மண்டபம் சொத்தையும் இதே அதிகார பத்திரத்தின் அடிப்படையில் தான் வாங்க சொன்னேன். நன் அதிகாரம் கொடுத்த பிறகு விலை, சொத்து விவரங்கள் பற்றி எனக்கு தெரியாததால் என் அப்பாவிடமே சொல்லி அவர் விருப்பப்படி வாங்க சொன்னேன். என் அப்பாவிற்கு பவர் எழுதி கொடுத்த பிறகு நான் சொந்நதமாக சொத்து எதுவும் எனக்கு வாங்கி கொள்ளவில்லை. 2014க்கு பிறகு இந்தியா வந்து என் பெயரில் ஒரே ஒரு சொத்து வாங்கி கொண்டேன். நான் என் அப்பாவிற்கு கொடுத்த அதிகார பத்திரத்திற்கும் தாவா சொத்துக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் அது சரியல்ல.